DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No. 386/2022**

Deposition of witness for Prosecution அ.சா.4

| | |
|---|---|
| Name | : லெட்சுமணன் |
| Father/ Husband Name | : சுப்பையா |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : |

எதிரி ஆஜர்

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 13.11.2025.

<u>**முதல்விசாரணை:-**</u> சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது கோவில்பட்டியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரியை தெரியும். கடந்த 11.08.2022-ம் தேதி என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள 3 வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி புகாரில் உள்ள 3 வது சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேற்படி கையெழுத்தை திருவிழாவில் நிகழ்ச்சி நடத்த போலீசில் அனுமதி பெறுவதற்காக மனு கொடுப்பதாக நினைத்து கையெழுத்து செய்தேன்.

**(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதன் பேரில் இந்நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டது).**

<u>**அரசுதரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

1. கடந்த 18.08.2022-ம் தேதி வேலாயுதப்பட்டிணம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் விசாரணை செய்த போது கடந்த 11.08.2022-ம் தேதி மாலை 03.15 மணிக்கு மாரியம்மன் கோவில் முன்பு சாட்சிகளுடன் நின்று பேசிக் கொண்டிருந்த போது எதிரி பொதுவெளியில் அசிங்கமாக பேசி கொலை மிரட்டல் செய்தார் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை.**</u>

**<u>மறு விசாரணை :</u>** **இல்லை.**

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.